**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 216/2023**

**Prosecution witness : அ.சா.10** **Date : 17.11.2023**

| | |
|---|---|
| **Name : பரமசிவம்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022–ம் வருடம் நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, கடந்த 27.09.2022–ம் தேதி மாலை 5 மணிக்கு பழனிசாமி மகன் ராஜா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று புகார் மனுவின் தன்மைகு ஏற்ப கருமலைக்கூடல் காவல் நிலைய குற்றஎண்.215/2022 ச/பி 279, 337 இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும்.**

2) இந்த வழக்கில் சாலை விபத்தில் காயம்அடைந்த சக்திவேல் என்பவர் கடந்த 27.09.2022–ம் தேதி மாலை 17.25 மணிக்கு மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்து போன காரணத்தால் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து அதன்பேரில் இதச பிரிவு 279, 337 லிருந்த 279, 304(ஏ) ஆக மாற்றம் செய்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.6 ஆகும்.** பின்னர் மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) எத்தனை மணிக்கு புகார் ராஜா என்பவர் கொடுத்தார் என்றால் மாலை 5 மணிக்கு ஆகும். புகாரை யார் எழுதினார்கள் என்றால் அவரே எழுதிக்கொண்டு

வந்தார். முதல்தகவல் அறிக்கை பதிந்தபிறகு நான் சம்பவயிடம் போக வில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் ஆய்வாளர் யாரும் இல்லை என்றும், நான் மட்டும் தான் இருந்தேன் என்றால் சரிதான்.

4) இறந்தபின்னிட்டு தகவல் எத்தனை மணிக்கு கிடைத்தது என்றால் 17.25 மணிக்கு ஆகும். எந்த தேதியில் நான் ஆய்வாளர் வசம் வழக்கு கோப்பை ஒப்படைத்தேன் என்றால் 27.09.2022–ம் தேதி 17.25 மணிக்கு ஒப்படைத்தேன்.

**மறுவிசாரணை இல்லை.**

ஓம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**